**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 97/2017**
**Deposition of Witness for the Plaintiff – DW1**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of 11/2024**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **மாணிக்கம்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **பெருமாள்** | **தொழில்** | ஆயில் வியாபாரம் |
| **Village:** | **பிச்சாம்பட்டி** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 62 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1வது பிரதிவாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். நான் பக்கவாதத்திற்காக நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையில் சிகிக்சை எடுத்ததற்கான மருத்துவ ஆவணங்களின் அசலை தாக்கல் செய்கிறேன். அந்த மருத்துவ ஆவணங்களுடன் கூடிய ரசீதுகள் **பி.த.சா.ஆ.1** ஆகும்.

வாதி தாக்கல் செய்த தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**(வாதி வழக்கறிஞர் ஆஜர். வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. )**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
**கரூர்.**